விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 பங்குனி 14 றஜபு 27 இதழ் 44

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-3-1987

பாகிஸ்தானிடமிருந்து—

## 10 லட்சம் டொலர் பெறுமதியான

## ஆயுதங்களை இலங்கை கொள்வனவு

இஸ்லாமாபாத், மார்ச் 27

இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளுக்காக பாகிஸ்தானிடமிருந்து பத்து லட்டம் டொலர் பெறுமதியான ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரச படையினருக்கு வேண்டிய சகலவிதமான ஆயுதப் பயிற்சிகளையும் பாகிஸ்தான் வழங்கி வருவதாகவும் அவர் கூறினர்.

இதேவேளை இலங்கைப் பிரதமர் திரு. பிரேமதாஸ தற்போது இருதரப்பு உறவு குறித்து பாகிஸ்தான் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் வந்துள்ள குறிப்பிடத்தக்கது- (எ)

### புகார்

[வவனியா]

வவனியா பகுதிகளில் அண்மைக் காலத்தில் தொலைபேசி கம்பிகளை வெட்டியவர்கள் ஊர்காவல் படையினரே என்று வவனியா பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எக்ஸ். சொர்ணபாலா மேலிடத்திற்கு புகார் தெரிவித்துள்ளார். (வா)

● காங்கேசன்துறையிலிருந்து முகாம் நோக்கிச்சென்ற

# இராணுவ அணிமீது புலிகள்

# பாரிய கண்ணிவெடி தாக்குதல்

## 12 படையினர் ஸ்தலத்தில் பலி

(பலாலி நிருபர்)

**பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 7 மணியளவில் பத்துக்கு மேற்பட்ட கனர வாகனங்கள் சகிதம், கால்நடையாக காங்கேசல துறை ஹாபர்வியூ ஹோட்டல் முகாமை நோக்கி சென்றுகொண்டிருந்த 500க்கும் மேற்பட்ட இராணுவஅணி ஒன்றின்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதல், ரொக்கட் லோஞ்சர் தாக்குதலில் 12 படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.**

மேலும் இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

இந்த இராணுவ அணி ஊறணிப் பகுதியிலுள்ள காங்கேசன்துறை மகாவித்தியாலயத்திற்கு முன்பாகச் சென்று கொண்டிருக்கும்போது விடுதலைப்புலிகளின் போராளிகள் தாம் ஏற்கனவே புதைத்து வைத்திருந்த நாலு கண்ணிவெடிகளை வெடிக்க வைத்தனர். தொடர்ந்து இராணுவ அணிமீது ரொக்கட் லோஞ்சர் தாக்குதலையும் மேற்கொண்டனர். கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினரும் ரொக்கட் லோஞ்சர் தாக்குதலில் 7 பேருமாக 12 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர். இருகவ வாகனங்கள் சுக்கு நூறுகச்

(5-ம் பக்கம் பார்க்க)

### காயமடைந்த பொது மக்கள்

பலாலி, வெள்ளி

காங்கேசன்துறை ஊறணிப் பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்தோர் விபரம் வருமாறு:

கதிர்காமு பத்மநாதன் 36 வயது, இலங்கை வங்கி ஊழியர், சின்னத்துரை சரவணபலான் வயது 33, சீமெந்து தொழிற்சாலை ஊழியர், சின்னவன் இரத்தினராசா (வயது27) கந்தசாமி ரவீந்திரன் (வயது 21) கந்தையா செல்வம் (வயது 19), அப்புத்துரை மனோகரன் (வயது 27), இளையவன் கதிரன் (வயது 55), சோமசுந்தரம் சோதியம்மா

5-ம் பக்கம் பார்க்க)

### மினிபஸ்ஸை துரத்தி ஹெலி துப்பாக்கிபிரயோகம்

யாழ்ப்பாணம், சனி

தையிட்டி ஆவளைச்சந்தியில் ஹெலி கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலினால் இருவர் காயமடைந்தனர்.

நேற்று மயிலிட்டிப் பகுதியிலிருந்து புறப்பட்ட மினி பஸ் ஒன்றை நோக்கி ஹெலியிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்

(5-ம் பக்கம் பார்க்க)

ஏழு நாட்களின் பின்

### குறைந்தளவு எரிபொருளுடன் லொறிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், சனி

அநுராதபுரம் எரிபொருள் நிலயத்திலிருந்து தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்திற்கு எரிபொருள் ஏற்றிவரச் சென்ற லொறிகள் யாவும் 7 நாட்களின் பின் எரிபொருள்களுடன் நேற்று வந்து சேர்ந்தன. ஆனல் அவை குறைந்தளவு எரிபொருள்களுடனேயே திரும்பி வந்தன.

தெல்லிப்பழை ப. நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கு பெற்றோல், டீசல் மண்ணெண்ணெய் ஆகியவற்றை ஏற்றி வருவதற்கு நான்கு லொறிகள் கடந்த சனிக்கிழமை அநுராதபுரம் எரிபொருள் நிலயத்திற்கு சென்றிருந்தன. எரிபொருள் ஏற்றிவரச்சென்ற இந்த லொறிகள் யாவும் எரி

(5-ம் பக்கம் பார்க்க)

### கல் நங்கூரம்

சென்னை, மார்ச் 27

மன்னர் குடாப்பகுதியில் கல்லாலான நங்கூரமொன்றை தஞ்சையூர் தமிழ்ப்பல்கலைக்கழக தொல்பொருள்துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு தொன் எடையுள்ள இக்கல் நங்கூரம் பல நூற்றுண்டுகள் காலம் தொன்மை வாய்ந்ததென, தஞ்சைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அகஸ்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

### பஸ்தரிப்பு நிலையத்திலும் மரநிழலிலும் மக்கள் தஞ்சம்

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் தத்தமது வீடுவாசல்களை விட்டு, உடுத்திருந் உடுப்புகளுடன் குழந்தைகள் தொடக்க முதியோர்வரை இடம்பெயர்

(5-ம் பக்கம் பார்க்க)

வவனியா பிக்கு யாழ்வர

### தளபதி கிட்டு அனுமதி

யாழ்ப்பாணம், சனி

தமிழீழ விடுதலை புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட யாழ். பொலிஸ் விடுதி இராணுவ முகாமைச் சோந்த படையினர் 8 பேரையும் அவர்களது உறவினர்களும் தென்பகுதி சமாதானத்தை விரும்பும் பிரமுகர்களும் பார்வையிடுவதற்கு வவனியா சமாதானக் குழுதலைவரும் பௌத்தமத குருவுமான சியம்பல கஸ்வல விமலசார தேரோ அனுமதி கோரி யாழ். குடாநாட்டு தளபதி திரு. கிட்டுவிடம் பத்திரிகைகள் மூலம் விடுத்த பகிரங்கமான வேண்டுகோளை திரு.

(5-ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னைக்கு

### இலங்கை அரசு விரைவில் தீர்வுகாணவேண்டும் — ராஜீவ்

சென்னை, மார்ச் 27

''இலங்கையில் இடம்பெற்று வரும் அப்பாவித் தமிழ்மக்கள் மீதான வன்முறை நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படுவதுடன் இனப்பிரச்னைக்கு இலங்கை அரசு விரைவில் தீர்வு காணவேண்டும்.''

இன்று சென்னை வந்த இந்தியப்பிரதமர் திரு. ராஜிவ் சாந்தி நெய்வேலியில் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் இலங்கை இனப்பிரச்னை குறித்து இவ்வாறு தமது கருத்தை வெளியிட்டார்.

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்ட நிலைமைகள் பற்றி

### தமிழக முதலமைச்சருடன் புலிகள் பேச்சுவார்த்தை

சென்னை, மார்ச் 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் லாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் உறுப்பினர்களும் தமிழக முதலமைச்சர் திரு.எம் ஜி ராமச்சந்திரனை நேற்று சந்தித்து இலங்கை இனப்பிரச்னையின் தற்போதைய நிலைபற்றி விரிவாக பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

சுமார் இரண்டு மணிநேரம் நீடித்த இப் பேச்சுக்களில் முதலமைச்சருடன் மாநில உணவுத்துறை அமைச்சர் திரு

(5-ம் பக்கம் பார்க்க)

### நாவற்குழியில் 3 பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதல் பல வீடுகள் சேதம்

(அலுவலக நிருபர்)

நாவற்குழியில் மூன்று ஹெலி கொப்டர்கள் வானத்தில் பறந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட மூன்று பொம்மர்கள் நடத்திய தாக்குதலினல் பல வீடுகள் சேதமடைந்துள்ளன வீதிகளெங்கும் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன ஒருவர் காயமடைந்துள்ளார்.

(5-ம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறைவீதியில் மினிபஸ்மீது 'ஹெலி' தாக்குதல்

யாழ்ப்பரணம், சனி

நீர்வேலி பருத்தித்துறைவீதியில் பிரயாணிகளுடன் சென்று கொண்டிருந்தபச்சைநிற மினிபஸ்ஸை ஹெலிகொப்டரொன்று துரத்தித்துரத்தி சுட்டதில்

5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பழைய வீட்டு தீராந்திகள், மரங்கள், கேற் முதலியன விற்பனைக்கு. ஆசை, கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் சந்தி, உப்புமடம் பிள்ளையார் கோவிலடி. சி-8202

பாவிப்பிலுள்ள டெலிவிசன், றேடியோ, மின்விசிறி, மரத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. ஆசை, கே. கே. எஸ். வீதி, கோண்டாவில், உப்புமடம் பிள்ளையார் கோவிலடி. சி-8203

உபயோகித்த வீட்டுத்தளபாடங்கள், தேக்கு அல்மாரிகள், குசினிகபேட் Show case, சாப்பாட்டுமேசை, கதிரைகள், Singer மெஷின், கசற்றேடியோக்கள், பெரிய பித்தளை இட்டலிசட்டி, குத்துவிளக்குகள், தாம்பாளங்கள், சில்வர்பொருட்கள் இங்கிலிஸ்ரீசெற்டின்னர் செற், Oven Carpet, Ice flask, ஹோல்செற், T.V Stand, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. எம். தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், சென்பற்றிக் சந்தி அருகில். சி-8242

சொனி K. V 2032, M. E கலர் ரி.வி 20'', நஷனல் N. V 7500E.M வீடியோ டெக், நஷனல் R.X-C37F ரூ இன் வண், டோவ் அம்பிளிவயர் ஸ்பீக்கர்கள், மற்றும் சன்யோ பைனியர் ரூ இன் வண் விற்பனைக்குண்டு. தொடர்பு: றொலிவொயீஸ் என் ஜினியேஸ், 184A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், சி 8244

[illegible] கோண்டாவில் வாமாஸ் அருகாமையில் 4 பரப்பு காணியும் 2000 சதுர அடி கொண்ட சகல வசதியும் உடைய வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வாமாஸ். சி-8247

C. D ஹொண்டா 200 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஏ. பத்மதாஸ், இல. 96-4ம், குறுக்குத் தெரு, [சின்னக் கடை] யாழ்ப்பாணம். குருநகர் சந்தைக்குஅருகாமையில். காலை 9முதல் மாலை 5 வரை பார்வையிடலாம். சி-8246

## 1–வது ஆண்டு நினைவஞ்சலி



C. D. விஜயரட்ணம்

தோற்றம்: 15-02-1924
மறைவு: 30-03-1986

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள். இவரின் நினைவாராதனை 29-03-87 அன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.
டச் றோட்,
சண்டிலிப்பாய்.
(சி 8185)

## விற்பனைக்கு

20 அடி உயர குறோமியம் பூசிய புதிய கொடிஸ்தம்பம் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-8204

Nallur Farm Centre முதல் தரமான அரைத்த சோளன், சோயா, மீன்தூள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி-8182)

சாப்பாட்டுக் கதிரைகள் National NV 300 Deck, புதிய குளிர்சாதனப் பெட்டிகள், Stabulizer, Lamp Shade தொட்டில், Shcw case, Centre table, Suit case மற்றும் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிமல்ரி சேவிஸ், திருநெல்வேலி, வடக்கு. (சி-8186]

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகராலயத்துக்கு அண்மையில் ஷி கோயில் நிதிக்காக பொல்வத்தைக்காணி 15 பரப்பு உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு தா. கனகசுந்தரம் (கிளாக்கர்) கலட்டியவத்தை, இளவாலை. சி-8194

Broilers இறைச்சிக்கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம்செய்து கொடுக்கப்படும். நல்லூர்பாம் சென்ரர். [நல்லூர் வீடியோ சென்ரர்] 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (சி7703]

ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் இறைச்சிக் கோழிகளும் (Broilers) விற்பனைக்குண்டு. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தேவைக்கு அண்ணா பாம் இணுவில் செம்மாதெரு, யாழ்ப்பாணம். ஏ-3777

## தேவை

அனுபவம் வாய்ந்தசமையல் ஆள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும்: இல. 47, விதானையார் றோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். சி-8245

மோட்டாரில் இயங்கும் Driller அல்லது சிறிய Driller Stand உடன் தேவை. ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-8241

G.C.E. (O/L) பகல்நேரவகுப்பிற்கு தமிழ் கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர் தேவை. நேரில் வரவும் ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, 3ம் கட்டையடி, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. சி-8214

உழவு மெஷின் றைவர் தேவை. கமப்பகுதி நன்றுகச் செய்யக்கூடிய முப்பதுவருடத்திற்கு மேல் அனுபவமுள்ளவராக இருத்தல் நன்று. விபரம் நேரில். 37, 39, அரசடி றோட், தட்டாதெரு, யாழ்ப்பாணம். சி-8226

எமது ஸ்தாபனத்தால் வெளியிடப்படும் பத்திரிகை, சஞ்சிகைகள் போன்றவற்றை தனித்தனியாக விற்பதற்கு விற்பனையாளர்கள் தேவை, இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரிலும் தொடர்பு கொள்வது நன்று. ஈகிள் அச்சகம், சட்டநாதர் கோவிலடி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம். (சி-8210)

## காணவில்லை

ஶ்ரீபாலன் (பாலன்) கட்டையான தோற்றம், கறுப்புநிறம், சிறிது புத்திக்கூர்மை அற்றவர். சாரம் அணிந்திருப்பவர் 15 நாட்களுக்குமேல் காணமல் போய்விட்டார். இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து வே. சரவணை, ஏழாலை பூதவராயர் கோவிலடியில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். சி-8237

## A/L 89 பிரிவு – II

(விஞ்ஞான பாடங்கள்)

### இன்று ஆரம்பம்:

(சனிக்கிழமை காலை 7-30 மணி)

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

| | | |
|---|---|---|
| 7-30 — 8-30 | — | விலங்கியல் |
| 8-30 — 9-30 | — | தாவரவியல் |
| 9-30 — 10-30 | — | பௌதிகவியல் |
| 10-30 — 11-30 | — | இரசாயனவியல் |
| 11-30 — 1-30 | — | தூயபிரயோககணிதம் |

குறிப்பு: பிரிவு I க்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

விபரங்கட்கு:

**New Master Institute**

B. M. C Lane, Jaffna.

(எ-3600)

## உச்சிமீது குண்டு வீழ்ந்து

சிவன்மாளிகை லிமிட்டெட் தீக்குளிப்பு

(166, காங்கேசன்துறை வீதி)

ஆயினும் எமது 35வருடசேவை தொடரும்.

கோவில் பூசைப் பொருட்கள், எவர்சில்வர், பித்தளை அலுமினிய, செம்பு வீட்டுப்பாவனைப் பாத்திரங்கள், குத்துவிளக்குகள், திருவாசி, கோவில் பட்டுக் குடை, மற்றும் உங்கள் சகலதேவைகளுக்கும்

புதிய அகம்

**சிவன் மாளிகை லிமிடெட்,**

(மாரி அம்மன் ஒழுங்கை)

திருநெல்வேலி சிவன் அம்மன்கோவிலுக்கு அண்மையில்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

[சி-8232]

## சேவை

மாதிரி விண்ணப்பப்படிவம், மாவட்டசேவைத் திட்டத்தின் கீழ் கனிஷ்ட பாடசாலைகளுக்கு ஆரம்ப உதவி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு-1987க்கான விண்ணப்ப படிவங்களை கிளீன் கட்டில் பெற்றுக்கொள்ளலாம். 239, மினிசார நிலைய வீதி, யாழ்ப்பாணம் ஏ-37 0

அரிந்தமரம், தேக்கம்பலகை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட செரமிக் வாஷ்பேசின் (Complete set] சாந்தகப்பை மற்றும் இரும்பு ஆணிகள் நட்டுகள் முதலியன நியாய விலையில் வாங்கவும் விற்கவும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: பொது முகாமையாளர், யூனிபோ நிறுவனம், வேம்பன் வீதி, உரும்பிராய். [சி7615]

## சீட்டிழுப்பு

செல்வா ஐக்கிய கலாசார சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக 25-3-87 [புதன்] நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டின் பரிசிற்குரிய இலக்கங்கள்.

| | |
|---|---|
| 1-ம் பரிசு இல: | 0434 |
| 2-ம் பரிசு இல: | 0218 |
| 3-ம் பரிசு இல: | 1128 |
| 4-ம் பரிசு இல: | 2172 |
| 5-ம் பரிசு இல: | 1926 |
| 6-ம் பரிசு இல: | 0090 |

நிர்வாகிகளிடம் தகுந்த அத்தாட்சி காட்டி பரிசில்களை 10-4-87 இற்கு முன்னர் பெறுக.

இப்படிக்கு,
நிர்வாகிகள்.
[சி-8234]

## 45-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
பொன்னம்பலம்
உதயசந்திரன்
(உதயன்)

மலர்வு: 20-07-67
உதிர்வு: 14-02 87

இமைப்பொழுதில் மாண்டு நீறுகினுலும் மாளாது உந்தன்மகிமை, மறையாது எம் நெஞ்சங்களில்! உதயா உன்நினைவு எங்கள் நெஞ்சத்தில் அணையாத சோதியாய் ஒளிவீசும். என்றும் உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

பெற்றோர், சகோதர, சகோதரிகள், மைத்துனர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

எமது மகன் உதயசந்திரனின் வீட்டுக்கிருத்திய வைபவம் 30-03-87இல் எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு எமது ஆறாத்துயரில் பங்குகொண்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னம்பலம்
குடும்பத்தினர்.
பிரம்படி, கொக்குவில்.
(சி 8230)

## வகுப்புக்கள்

Spokcn English எஸ். பி. ஐயர் பட்டதாரியானவர்களுக்கும், சர்வகலாசாலைப் புகுமுகச் சித்திபெற்றவர்களுக்கும். ஆரம்பம்: 31- 3- 87. நேரம் 9—10 செவ்வாய், வியாழன். 12, வைமன் வீதி, நல்லூர். [சி-8183]

A/L 88, 89 கலை, வர்த்தகம், விஞ்ஞானம் O/L பகல் நேர வகுப்புக்கள், Spoken English Class தமிழ், ஆங்கிலம், தட்டச்சு, சுருக்கெழுத்து. சித்திரை 16ம் திகதி வரை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். பிறிலியன் அக்கடமி, நெல்லியடி, சி-8211

பிரத்தியேக தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பமாகின்றன. 4-4-87 சனிக்கிழமை பி. ப. 2 மணி இராஜஸ்தான் தபால் கந்தோரடி, நெல்லியடி. சி-8174

G.C. E. A/L தூயகணிதம், பிரயோகணிகதம் பிரபல ஆசிரியர் நல்லையா. புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 04-04-87 [பி. ப. 4-00] முன்கூட்டியே பதிவுசெய்யவும். றோயல் இன்ஸ்ரிரியூட், கே. கே. எஸ். வீதி, இணுவில் சந்தி. சி-8213

## வலி-கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி.

### வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட சுமார் 6000 (ஆறுயிரம்) வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு விண்ணப்பிக்க விரும்புவோர் கேள்விவைப்புப் பணமாக ரூபா 100/-ம் மீளத்தகாத பணமாக ரூபா 5/-ம் சங்கக்காரியாலயத்தில் 5-4-87 திகதிக்கு முன்னர் கட்டி, விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை 10-04-87ந் திகதிக்கு பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விண்ணப்பிக்கும்போது என் வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச் சாக்கு கேள்விவிண்ணப்பம் என்று குறிப்பிடவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
வலி-கிழக்கு வடபகுதி
பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கம், அச்சுவேலி.
[எ-377[illegible]

## பெயர் மாற்றம்

இல. 13, காரைக் காட்டுலேன், வண்ணார் பண்ணைமேற்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசித்துவரும் சண்முகம் சிவாஜி கணேசன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **சண்முகம் சிவா** என மாற்றியுள்ளேன். இனிமேல் எல்லா ஆவணங்களிலும் சண்முகம் சிவா என்றே கையெழுத்திடுவேன் என இவ்வறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
சண்முகம் சிவா.

(சி 8235)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் சோவியத் பயணமாகிருர்

மாஸ்கோ, மார்ச் 27

**பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தாட்சர், சோவித் யூனியனுக்கான தமது உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பிக்கின்ருர். இந்த விஜயம் இடம்பெறவுள்ள இவ்வேளையில் சோவியத் பத்திரிகைகள் திருமதி தாட்சரை கடுமையாக விமர்சித்துள்ளன.**

உலகச் செய்திகள்

ஐரோப்பாவில் நடுத்தர ஏவுகணைகளை குறைப்பதன் மூலம் அப்பிரதேசத்தில் அமைதிக்கு ஓரளவு வழியமைக்கலாமென்று கூறிய சோவியத் அதிபரின் நிலையை கண்டித்த திருமதி தாட்சர் இது நடுத்தர ஏவுகணைகளுடன் மாத்திரமல்லாது குறுந்தூர ஏவுகணை விடயத்திலுமிருக்கவேண்டுமென்று திரு. கோர்பச்சேவை வற்புறுத்தியது அத்தரப்பில் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில வாரங்களாக பிரான்ஸ், மே. ஜெர்மன் அதிபர்களுடன் அணு ஆயுத குறைப்புகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடாத்திய திருமதி தாட்சர் ஏவுகணை குறைப்பு விடயத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளது அமெரிக்க சோவியத் ஏவுகணை பேச்சுக்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பன்னிரெண்டு வருடகாலத்தின்பின் பிரிட்டிஷ் பிரதமரொருவர் சோவியத்திற்கு செல்வது இதுவே முதல் தடவையாகும். எனினும் பல பிரச்னைகள் மத்தியில் சோவியத் செல்லும் திருமதி தாட்சரை சோவியத் பத்திரிகைகள் கடுமையாக வர்ணித்துள்ளதுடன் கேலிச் சித்திரங்களையும் வெளியிட்டுள்ளன.

கம்யூனிஸத்தை பலமாக எதிர்த்துவரும் திருமதி தாட்சர், அமெரிக்க சோவியத் பேச்சுவார்த்தைகளில் உறுதியான முடிவையெடுக்க பெரிதும் உதவுவாரென்றும் ஒரு சில சோவியத் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. (சி)

யப்பான் மீது பொருளாதாரத் தடை:

## பிரிட்டிஷ் பாராளுமன்றில் எம். பி.க்கள் பிரேரணை!

லண்டன், மார்ச் 27

பிரிட்டிஷ் பொருட்களை யப்பான் இறக்குமதி செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவதற்காக பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நூறு பேர் யப்பான் மீது வர்த்தகத் தடை விதிக்கவேண்டுமென்று கோரி பிரேரணை ஒன்றை கொண்டுவந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் மாத்திரம் பிரிட்டனுக்கும் யப்பானுக்குமிடையிலான வர்த்தகத்தில் யப்பானுக்கு 370 கோடி டாலர் சாதகமான வர்த்தக ஏற்றத்தாழ்வு இருப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

யப்பான் தனது உற்பத்திப் பொருட்களை பிரிட்டனுக்கு தாராளமாக ஏற்றுமதி செய்கின்ற போதிலும் பிரிட்டிஷ் பொருட்களை இறக்குமதி செய்ய தயக்கம்காட்டி வருவதனையடுத்தே மேற்படி பிரேரணை கொண்டுவரப்படுகிறது (சி)

## "இலங்கை இராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் யுத்தப்பயிற்சி"

### பாக். அதிகாரி தகவல்

இஸ்லாமாபாத், மார்ச் 26

"இலங்கை அரச படையினருக்கு வேண்டிய சகல விதமான யுத்தப் பயிற்சிகளும், நவீன போர்த்தளபாடங்களை கையாளும் முறைகளும் பாகிஸ்தான் படை வீரர்கள் மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது'

இவ்வாறு பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் உயர்அதிகாரி ஒருவர் இன்று இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் இலங்கை அரசு நவீன 'ஹவாக்' விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளது. அவை குறித்து பாகிஸ்தானுடன் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. வெகு விரைவில் இந்த விமானங்களை இலங்கை கொள்வனவு செய்யும் என்ருர்.

இதேவேளை இலங்கை அரசு கொள்வனவு செய்யவுள்ள ஹவாக் விமானங்களை அமெரிக்க கூலிப்படை அதிகாரிகளே செலுத்தவுள்ளார்கள் என்றும் கூறினர். (எ)

சுண்டுக்குளிப் பகுதியில்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அடுத்தடுத்து மரணம்!

யாழ்ப்பாணம், சனி

வியாதியின் நிலை என்ன என்பதை இதுவரை அறிய முடியாத நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அடுத்தடுத்து இறந்துள்ளார்கள்.

இப் பரிதாபநிலை சுண்டிக்குளிப் பகுதியில் உள்ள பழைய பூங்கா வீதியில் வசிக்கும் ஒரு குடும்பத்தில் நிகழ்ந்துள்ளது.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் வெளியான உயர்தரப் பரீட்சையில் சித்தி பெறுததினுல் மேற்படி குடும்பத்தைச் சேர்ந்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கலா (வயது 20) நச்சுத்திராவகம் அருந்தி பல நாட்கள் ஆஸ்பத்திரியிலிருந்து டிசம்பர் மாதம் உயிர் துறந்தார்.

மேற்படி மாணவி இறந்த 35ம்நாள் அவரின் சகோதரியின் கணவர் ஜெயராம் திடீரென வாந்தி எடுத்ததின் நிமித்தம் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உயிர் துறந்தார். சுண்டிக்குளி சனசமூக நிலையத்தின் தலைவரான இவர் இறக்கும் போது மிகவும் திடகாத்திரமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெயராமனுக்கு இரு சிறு குழந்தைகள் உண்டு இருவரும் பெண் குழந்தைகள் மூத்த பிள்ளைக்கு கொடிய புற்றுநோய் வருத்தம் என டாக்டர்கள் கூறிய தன் நிமித்தம் கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பல மாதங்களின்பின் யாழ்நகர் வந்தார். ஜெயராம் இறந்து 34ம் நாள் சுகதேகியாக இருந்த அவரின் மனைவி திருமதி ஜெயராம் திடீரென வாந்திஎடுத்து மூன்ரும் நாள் மரணமானுர். உயிரிழந்த போது இவர் யாழ். பீச்ரோட்டில் உள்ள தனியார் வைத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

திருமதி ஜெயராம் இறந்து 20ம் நாள் அவரின் சகோதரி செல்வி ஜீவமலர் (வயது 25) திடீரென வாந்தி எடுத்ததின் நிமித்தம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

மேற்படி நால்வரும் இறந்ததுக்கு சரியான வைத்திய அறிக்கை இதுவரை தெரிவிக்கப்படவில்லை. டாக்டர்களின் அறிக்கை ஒன்றுக்கொன்று முரணுகவேயுள்ளது.

தற்போது திருமதி ஜெயராமனின் சகோதரர் தேவநாயகம் 5பிள்ளைகளின் தந்தை சுகயீனமுற்று இருக்கிருர் இவரின் இளைய சகோதரர் ஒருவர் பாரீஸ் நகரிலும் கடும் சுகயீனமுற்றிருப்பதாகத் தெரியவருகின்றது. அடுத்தடுத்தேற்பட்ட இப்பரிதாப மரணங்களினுல் இப்பகுதி மக்களிடையே பெரும் பதற்றமும் கவலையும் ஏற்பட்டுள்ளது. (வி)

'ஷெல்' தாக்குதலில்

## காயமடைந்தவரின் பயங்கர அனுபவம்

யாழ்ப்பாணம், சனி

"அதிகாலை வேளை எங்கிருந்தோ, வந்த ஷெல் விழுந்து வெடித்தனுல் மக்கள் அளவெட்டி வீதியில் உள்ள பெரியமதகு ஒன்றினுள் ஒழித்துக்கொண்டார்கள். வீட்டுக் குசினியின் புகைபோக்கியின் கீழ்இருந்தபோது எனது வீட்டுக்கூரைமீது விழுந்த ஷெல் வெடித்ததினுல் எனது மார்பிலும் கையிலும் தலையிலும் காயமேற்பட்டது"

பலாலி இராணுவமுகாமிலிந்து நேற்று அதிகாலை ஏவப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு இலக்கான என். இராசையா இவ்வாறு தமது அதிகாலைப்பயங்கரஅனுபவத்தைக் கூறினுர்.

திரு. இராசையா தமது பயங்கர அனுபவம் பற்றி மேலும் கூறியதாவது. நேற்று முன்தினம்அதிகாலை 4-15 மணியளவில் எங்கிருந்தோ வந்த ஷெல் ஒன்று அளவெட்டி பிஞக்கைக் குளத்தடியில் விழுந்து வெடித்ததைத்தொடர்ந்து மக்கள் அரைத்தூக்கத்துடன் தமது குழந்தைகளுடன் பாதுகாப்பான பதகு ஒன்றினுள் ஒழித்துக்கொண்டனர்.

அப்போது அடுத்தடுத்து 3 'ஷெல்'கள் வீட்டில் வீழ்ந்துவெடித்ததில் பக்கத்து வீட்டு இளையதம்பி என்பவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

எனது மகள் பத்துநாள் குழந்தை ஒன்றையும் தூக்கிக் கொண்டு ஓடினுர். அவரும் குழந்தையும் தெய்வாதீனமாக உயிர்தப்பினுர்கள்.

ஷெல்காயத்துக்குள்ளான

(6-ம் பக்கம் பார்க்க)

இரிக்கெட்

## இந்தியா தோல்வி

(புதுடில்லி)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் ஐங் சட்பூரில் நடைபெற்ற ஆருவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்போட்டியில் இந்தியஅணிதோல்வியடைந்ததுடன் இம்முறை நடைபெற்ற டெஸ்ட் ஒருநாள் போட்டித் தொடரில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 44 ஓவர்களில் 3விக்கெட் இழப்பிற்கு 265 ஓட்டங்களை பெற்றறு. இதில் மஞேஜ் பிரபாகர் 128 ஓட்டங்களை பெற்றது குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஆடிய பாகிஸ்தான் அணி 44 வது ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 266 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணி இத்தொடரில் 6—1 என்ற ரீதியில் வெற்றிபெற்றுள்ளது. (பி)

பருத்தித்துறையில்

## ஷெல் தாக்கி மூவர் காயம் நான்கு வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் அதிகாலை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்தனர். 4வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இத்தாக்குதலில் காயமடைந்த தர்மலிங்கம் தில்லைநாதன், (வயது 21) பருத்தித்துறை, கிருஷ்ணபிள்ளை சாந்தகுமார் (வயது 20) தாளையடி,

(6-ம் பக்கம் பார்க்க)



மேகாட்டை பொலிஸ் விடுதி இராணுவ முகாமில் தமிழீழ விடுதலைப் புலிகளினுல் கைப்பற்றப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு சிப்பாயின் கவசத் தொப்பியும் மார்புக்கவச உடையும் இவை.

## முஸ்லிம் விவசாயிகள் மீது படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம், சனி

அக்கரைப்பற்றிலுள்ள வேலாமரத்துக் கிராமத்தைச் சுற்றிவளைத்த அதிரடிப் படையினர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த முஸ்லிம் விவசாயிகளைத் துப்பாக்கியால் தாக்கி காயப்படுத்தினுர்கள்.

கடந்த புதன் காலை பத்து மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

விவசாயிகளின் உணவுப் பொருட்கள், விவசாய உபகரணங்கள் என்பனவும் படையினரால் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

படையினரின் இத்திடீர் நடவடிக்கையால் அச்சம்கொண்ட விவசாயிகள் பாதுகாப்புத் தேடி விவசாய நிலங்களை விட்டு ஓடத் தொடங்கிய பொழுது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தினுல் எவரும் காயமடையவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பிரஜைகள் குழுவிடம் புகாரிடப்பட்டுள்ளது. (ஓ)

வெலிக்கடைச் சிறையில்

## 200க்கும் அதிகமான தமிழ் கைதிகள் உண்ணுவிரதம்

கொழும்பு, வெள்ளி

வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள இருநூறுக்கும் அதிகமான தமிழ் சிறைக்கைதிகள் நேற்று உண்ணுவிரதமிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி 18 மாதங்களுக்கு மேல் சிறையில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் அனைவரையும் விடுதலைசெய்ய வேண்டும்; அல்லது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும் என்றகோரிக்கை ஒன்றை ஜனுதிபதியிடம் முன்வைத்தே மேற்படி தமிழ்க் கைதிகள் உண்ணுவிரதத்தில் குதித்தனர்.

இக் கோரிக்கைகளை அரசு உடன் பரிசீலனை செய்யாவிடில் சாகும்வரை உண்ணுவிரதம் இருக்கப்போவதாகவும் மேலும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். [எ]

### மணிவாக்கு

குத்தும் முள்ளில் கொடிக்கால் திராட்சையா?
கொடுவெங்காட்டில் அத்திப்பழமா?
நன்மரமாயின் நற்கனி கொடுக்கும்
தீயனவாயின் தீயன வளர்க்கும்.

—இயேசு காவியம்

## நமது நோக்கு

### தேவை:
# இந்திய மத்தியஸ்தம் அல்ல; இந்திய தலைமைத்துவம்

மட்டக்களப்பில் நடைபெறும் கொடுமைகளை அவதானிக்கும் போது மத்திய அமெரிக்கசம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

ஐந்நூறுக்கு மேற்பட்ட பெண்களில் அதிகமானோர் கணவரை இழந்தவர்கள். மட்டக்களப்பு கச்சேரிக்கு அணிதிரண்டு முற்றுகையிட்டபோது அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து, அவர்களின் நீண்ட அவலக் கதைகளைப் பொறுமையுடன் கேட்டதாகச் செய்தி.

கற்பழிப்பு முதல், காணமற்போதல். சுட்டுக்கொலை, படையினரின் துன்புறுத்தல் போன்ற முறைப்பாடுகள் 'கண்ணீரும் கம்பலையும்' என்ற படலத்தில் வரையப்பட்டன. மட்டக்களப்பு அமைச்சர்களால் முடியாதது, அரசாங்கஅதிபரால் முடியுமா?

ஜெனிவா தீர்மானம் இலங்கை அரசை அசைக்குமென்று நாம் நம்பவில்லை, அதேசமயம் உலக அபிப்பிராயம் பொதுவாகவும், இந்தியாவின் நடவடிக்கைகள் சிறப்பாகவும் ஜனாதிபதியை பள்ளிகொள்ள விடா.

மட்டக்களப்பின் நிலை ஒருவிதம். யாழ்ப்பாணத்தின் நிலை இன்னொருவிதம். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக்கொண்டால், டிசம்பர் 19ம் திகதிய நிலைப்பாடு என்ன பாடுபடுமென்பது ஜே. ஆரின் அரசியல் தந்திரம் தெரிந்தவருக்குத் தெரியும். ஆனால் அது இலகுவில் நடைபெறாதென்பதும் அதி உத்தமருக்குத் தெரியும்.

இன்று இந்தியப்பிரதமர் ராஜீவ் அதனை நன்குணர்ந்திருக்கிறாரென்பது தமிழ் மக்களுக்கு ஆறுதல். ஆடாத ஆட்டமெல்லாம் ஆடியபோதும், போரிலோ, பிரசாரத்திலோ முன்னேற்றம் இல்லை என்பது வெளிப்படை. பிரதமரின் பாகிஸ்தான் விஜயம் இது போன்ற சிறுதந்திரம்.

வடக்கிலும், கிழக்கிலும் சுமார் இருபத்தையாயிரம் அகதிகள் இருப்பதைச் சிங்களமக்கள் வெற்றிக்கணக்கில் போடுவார்களா? தமிழ் மக்கள் மீது போர்தொடுப்பதை நிறுத்தவேண்டுமென்று இந்தியா விடுத்த கோரிக்கை ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கவில்லையே!

பொய்ய சாதனைகளை மிகச் சிறிய வெருட்டுக்களால் இயற்றவல்ல ஜனாதிபதியின் 'குஸ்திச் சித்தாந்தம்' இலகுவில் எதற்கும் இளகும் தன்மையதன்று. ஐம்பது வயதடையாத ஒருவரின் கூற்றிற்கு ஐம்பது வருட அநுபவம் அஞ்சுமா?

இதற்கு முழுமாறாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், பௌத்தசங்கமும் இந்தியப்பிரதமருக்குச் சிரம்தாழ்த்தி விண்ணப்பம் செய்கின்றனர். இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைக்கும் எச்செயலிலும் இறங்கலாகாதென்று இந்தியப் பிரதமரை மன்றாடுகின்றனர்.

இதன் மர்மம் விளங்க முடியாததா? அவ்வித அபாயம் எதுவும் இருந்தால் தங்களுக்குத்தான் அதனைத் தடுக்கும் செல்வாக்குண்டென்று பௌத்த-சிங்கள மக்களுக்கு நல்கும் ஒரு குளிகை அது.

யாழ்ப்பாணப்போர் மிக விசித்திரமான நிலையில் இருக்கின்றது. யுத்தக் கைதிகள் காண்டம் மீண்டும் வாசிக்கப்படுகிறது. தேசிய பாதுகாப்பமைச்சர் பரக்கமுழிப்பது தவிர்க்க முடியாத பரிதாபநிலை.

இந்த யுத்தத்தில் (இது யுத்தமா?) எப்பகுதியினருக்கும் வெற்றி கிட்டாது என்று அமைச்சர் கூறிவருவதால் எந்தத் தோல்விக்கும் அது சங்கப்பலகை போல் இடமளிக்கும்.

இதேகருத்தை யாழ்ப்பாணப்போராளிகள் தளபதிகிட்டு வெளியிடும்போது அவர் அளித்த விளக்கம், தலைமைத்துவத்திற்கு 'ஒக்ஸ்போர்ட்' படிப்புத் தேவையில்லை என்பது தெளிவு.

தமிழ்ப்போராளிகளின் நோக்கம் தமிழ் மாநிலத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதே. நாட்டின் ஆட்சியைக் கவிழ்க்கவோ அல்லது நாட்டின் வேறெந்தப்பகுதிகளைக் கைப்பற்றவோ எழுந்த போரல்ல.

சிங்கள மக்களுக்கெதிரானபோரும்அல்ல; யுத்தக் கைதிகளைப் பரிமாறும் விடயத்தில் தமிழர் பண்பாடு-போரிலும் சமாதானத்திலும்-தனித்துவம் பெற்றிருக்கிறது.

"போரை நிறுத்து என்பது இந்தியாவின் வெற்றுப்பேச்சு; போரை பேச்சின் மத்தியில் தொடர்வதே" ஜனாதிபதியின் நோக்கம். எனவே போரை நிறுத்துவதற்கு வழி ஏது.

தமிழ்ப் போராளிகள் 'ஈழத்தை' இந்தியா ஏற்க வேண்டுமெனப் பிடிவாதமாக இருக்கின்றனர்.

நாட்டைப் பிரிப்பது எம் உயிர் உள்ளவரை நடைபெறாது என்று, இன்று நிதியமைச்சர் ரொனியும் பேசத் தொடங்கிவிட்டார்.

நாட்டைப் பிரிக்கும் முயற்சி இன்றுஅவசியமானதல்ல; போர் நிறுத்தம் நிறைவேறுது போனால் பொதுமக்கள் [தமிழர் மட்டுமல்ல] அழிவும் தீயசக்திகளின் தலையீடும் இலங்கையை ஒரு லெபனானாக்க முடியும். போர் என்றும் நின்றபாடில்லை என்ற நிலை வெறும் கற்பனையல்ல.

எனவே போர் நிறுத்தமென்பது இந்தியாவின் இறுக்கமான எச்சரிக்கையாகவேண்டும். இந்த எச்சரிக்கை செயற்படத் தவறின் அடுத்த செயல் தெளிவாக வேண்டும்.

தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக இந்தியா இலங்கை மேல் போர் தொடுக்க வேண்டியதில்லை. மனிதாபிமான ரீதியில் தக்க அறிவித்தலின்பின் தமிழ்ப்பகுதிகளிலுள்ள 'மரண' முகாம்களை அகற்றவும், இராணுவத்தை வெளியேற்றவும் தயங்காது செயற்படவேண்டும்.

உலகின் எந்த நாடும் எந்த மக்களும் இதனைக் கண்டிக்குமென்ற அச்சம் அவசியமற்றது.

இது இன்று இந்தியாவின் அலட்சியம் செய்யமுடியாத பொறுப்பாகின்றது.

### இலங்கையில் மனித உரிமைகள் மீறல் – 9

# 1986-ல் தமிழ்மக்கள் மீதான ஆகாயத் தாக்குதல்கள் தீவிரமடைந்தன

86ம் ஆண்டில் மேலும் மேலும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர். இலங்கை அரசின் நிலையை ஜனாதிபதி ஜயவர்த்தன பின்வரும் இரு பேட்டிகளில் வலியுறுத்தினர்.

**இந்தியா ருடே**

"...தமிழர் பிரச்னை ஓர் ராணுவப்பிரச்னை, ராணுவ ரீதியிலேயே எதிர்கொள்ளப்பட வேண்டும்... பேச்சுக்களை நிறுத்திவிட்டு நாங்கள் மீண்டும் தாக்க வேண்டுமென்ற மனோபாவம் ஏற்கனவே உள்ளது." (15-12-85)

**'லண்டன் ரைம்ஸ்'**

"...இந்த யுத்தத்தில் நான் வெற்றியடைந்து வருகின்றேன்... புதுடில்லியோ, லண்டனோ அல்லது வேறெந்த நாடோ என்ன கூறுகின்றது என்பதுபற்றிகவலைப்படவில்லை தீவிரவாதிகளைஎவ்வளவு விரைவிலும் முறையாகவும் அடக்க முடியுமோ அதுதான் பிரச்னையின்கரு. அதை நான் அடையும் தறுவாயில் உள்ளேன். இப்போது என்னிடம் அதிகளவு ஆயுதங்கள் உண்டு. பாகிஸ்தான் போன்ற நாடுகள் எனது மக்களுக்கு பயிற்சியளித்து வருகின்றன..." (27-01-86)

86ம் ஆண்டில் தாக்குதல் விமானங்களினதும், ஹெலிகொப்டர்களினதும் தாக்குதல்களும் அதிகரித்தது. 'கெரில்லா நிலை'களுக்கெதிராகவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டனவென அரசதரப்பில் கூறப்பட்டது. ஆயினும் இந்த கண்மூடித்தனமான ஆகாய நடவடிக்கையால் பலபொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**ஜனவரி**

அரசினல் நியமிக்கப்பட்ட யுத்த நிறுத்தக் குழு யாழ்ப்பாணத்தில் படையினரால் யுத்த நிறுத்தம் மீறப்பட்டதா என்பதை ஜனவரி 4ம் திகதி ஹோட்டல் அஷோகவில் விசாரணை செய்யவிருந்தது.

அன்று காலை 8 மணியளவில் இப்பகுதியைச்வளைத்த ஹெலிகொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. இதில் 1 பெண் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர். 21 பேர் படுகாயமுற்றனர். இச்சம்பவத்தையடுத்து யாழ். நகர் வெறிச்சடையவே குழு னது அன்றைய விசாரணைகளை ஒத்திப்போட்டு அதனை மறுநாள் நடத்த தீர்மானித்தது. ஆயினும் அன்றைய தினம் (5-1-86) பிற்பகலும் கோட்டை முகாமிலிருந்து, மோட்டர் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் 'ஹெலி' யிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையில் 9 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமடைந்தனர்.

ஜனவரி 4-ம் திகதி மட்டு. மாவட்டத்திலுள்ள புலுகன்னுவ, பெருவட்டதல்தலாவை கிராமங்களுக்கு வந்த ஊர் காவற்படையினர் அங்கு மாட்டுப்பண்ணையில் கடமையில் ஈடுபட்டிருந்தோர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனல் பாதுகாப்புத்தேடி அனைவரும் காட்டுக்குள் ஓடினர். பின்பு அவர்கள் தமது கிராமங்களுக்கு வந்து பார்த்தபோது தமது குடிசைகளும், மாடுகளும் எரிக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். அத்துடன் 3 பேர் தமது குடிசைக்குள் எரிந்து போயிருப்பதையும் கண்டனர். வேறு ஏழுபேரையும் ஊர் காவற்படையினர் கைது செய்துகொண்டு போயினர்.

**இருதயபுரம் படுகொலை**

ஜனவரி 9-ம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் 25 வாகனங்களில் வந்தசுமார் 300 அதிரடிப்படையினர் மட்டக்களப்பு நகரசபை எல்லைக்குள்ளிருக்கும் 'இருதயபுரத்தை' சுற்றி வளைத்துத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நடவடிக்கையின்போது தமிழ் கெரில்லாக்களினல் எறியப்பட்டதாகக் கூறப்படும் கிறனேட் ஒன்றினல் இரு கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து கமாண்டோக்களின் மூர்க்கமான தாக்குதல்களினல் குறைந்தது 24 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். ஒரு சம்பவத்தில் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தின் வளவினுள் 3 ஆலய உதவியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மட்டு. ஆயர் அதி வண. சுவாம்பிள்ளையின் தகவலின்படி, பிரதேசத்தினுள் உள்ள கத்தோலிக்க ஆலய பிதாவான வண. பிதா ஜோசப் டி கொனிங் (வயது-56) ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளுக்குத் தயார் படுத்திக் கொண்டிருக்கையில் திடீரெனக் குழப்பப்பட்டார். படையினர் ஒருவர் பிதாவை அவரது அறையில் தடுத்து வைத்து, அவரது ஆராதனையை நிகழ்த்த முடியாமல் செய்தார். ஒருசில மணி நேரத்தின் பின்னர் 14 - 30 வயதுக்கிடைப்பட்ட சுமார் 300 பேரை ஆலய வளவினுள் கூட்டிவந்த படையினர் அவர்களைக் கட்டிவிட்டு இருவர் இருவர் என தரையில் படுக்கவைத்து துப்பாக்கி முனைகளாலும். சப்பாத்துக்களினலும், தடிகளினலும் தாக்கினர், 8 மணியிலிருந்து 11 மணிவரை இது நீடித்தது. 11 மணிக்குப்பின்னர் ஆலய கதவுகள் பலாத்காரமாகத் திறக்கப்பட்டு சில இளைஞர்கள் ஆலயத்தினுள் கொண்டு வரப்பட்டு மீண்டும் தாக்கப்பட்டனர். இதனல் அவர்களின் உடல்களிலிருந்து இரத்தம் ஒழுகியது.

...... இந்தநேரம் அறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பிதா, தமது பொறுப்பிலுள்ள இவ்வாலயத்தில் இவ்வாறு நடப்பதைப் பொறுக்க முடியாது தலையிட்டபோது அவர்மீது வார்த்தை துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை ஆலய உதவியாளர்கள் மூவர் ஆலயத்தினுள் இருந்து வெளியே இழுத்து வரப்பட்டு, தாக்கப்பட்டு பின்னர் ஆலயத்திற்கு வெளியே ஓடுமாறு பணிக்கப்பட்டனர். பிதாவின் முன்னிலையில் இவர்கள் ஓடிக்கொண்டிருக்கும் போதே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மரக்கூட்டுத்தாபன ஆலைக்குச் சென்ற கமாண்டோக்கள், அங்கு காவலிலீடுபட்டிருந்த மூவரை சுட்டுக்கொன்றனர். அத்துடன் பெற்றோலியக் கூட்டுத்தாபன குவாட்டர்சினுள் பிரவேசித்த கமாண்டோக்கள் ஒரு இளைஞரைக் கொன்றனர்.

இறந்தோரின் சடலங்களை திரும்பத் தருமாறு ராணுவ இணைப்பதிகாரிக்கு பிரஜைகள் குழுவினல் கோரிக்கை விடப்பட்டாலும் அது நிறைவேற்றப்படவில்லை.

கும்புறுப்பிட்டியில் ஜனவரி 23-ம் திகதி காலை தமது வயல்களுக்குக் காவலிருந்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த விவசாயிகளை ராணுவத்தினர் குழுவொன்று சுட்டுக்கொன்றது.

ஜனவரி 25-ம் திகதி கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்துநின்ற சுமார் 75 பயணிகள்மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 12 பயணிகள் பலியாகி

(6-ம் பக்கம் பார்க்க)

## மருதடி விநாயகனே

வேழமுகம் கொண்டவனே! மருதடி ஐங்கரனே!
வேண்டுபவை ஈபவனே! விக்கினேஸ்வரனே!
சத்தியத்தை அறிந்து நின்திருவருளால் கஜானனே!
சமாதானத்தை விரைவில் நாட்டிடுவாய்
விநாயகனே

இனிதுஇங்கு மாந்தர் வளமுடன் வாழ
இறைஞ்சுகிறேன் நின்னடியைத் தினமும் கஜமுகனே
மனிதசக்தி மேன்மேலும் வளர்ந்து தெய்வ
வாழ்வடைய மருதடியானை வேண்டுகின்றேன்.

— கௌரி கணேஷநாதன்

★ நாளை மருதடி விநாயகர் கொடியேற்றம்.

## திருவாசகம் போல சபாரத்தினம் சுவாமிகள் வாழிவாழி

உருகாத மனத்தனையும் நெக்குருக்கி
உளமார சிவபிரானின் பதமேசேர்க்கும்
பெருவாசகத் தேனைப் பொழிந்து மாந்தர்
பேரின்ப வாரிதியில் ஒன்றுசேரத்
தருமாசபாரத்ன செம்மல் சேவை
தாரணியில் மாந்தரது நெஞ்சில் என்றும்
திருவாசகம்போல தித்தித்தன்பாய்
திகழ்ந்திடுமே சபாரத்னம் வாழிவாழி.

ஸாஹித்தியாஸாகரம்
வீரமணி ஐயர்

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

J. V. C. G. X. N. 70E வீடியோ கமரா, National ரைற்ரில் மிக்ஷர், National S. I. வீடியோ மிக்ஷர் விற்பனைக்குண்டு. பி. ப. 4 மணி முதல் பார்வையிடலாம். 45, பழம்றோட், சுந்தர்மடம், யாழ்ப்பாணம். [சி8221]


## 1—வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி ஜெயந்தி
பொன்னையா
(இராசாத்தி) (கணேஸ்)
[மானிப்பாய்
இந்து மகளிர் மாணவி]
தோற்றம்: 31-3-1966
மறைவு: 8- 4- 1986
திதி: 28- 3- 87

அன்பின் பாசமலரே
பண்பின் பிறப்பிடமே
குடும்பத்தின்
இருளகற்றவந்த
ஒளிச்சுடரே இராசாத்தி
முன்னவர் நாமிருக்க
பின்னவள் நீ சென்ற
தென்ன!
வெம்புதே இதய
மெல்லாம்
வேகுதே அங்க
மெல்லாம்
மண்ணில்
நீ மறைந்தாலும்
எத்தனை காலங்கள்
நாமிங்கு வாழினும்
அத்தனை காலமும் உம்
உருவம்
மானுடம் இருக்கு
மட்டும்
மனதிலே நிலைத்து
நிற்கும்.

அன்னவரின் ஓராண்டு நினைவஞ்சலியில் பங்கு பற்றி சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்,
மா. பொன்னையா (கணேஸ்) குடும்பத்தினர். (சி-8256)


LIDO
From Today
Daily at 10-30 a. m.
2-30 & 4-30, 6-30 p.m.
MAX DUGAN
RETURNS
(colour & action)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
Super Star Bruce Lee in
THE MAGNIFICENT
KICK
(Karate Film)
புரூஸ்லீ நொடிநேரத்தில் 3 முறை உதைக்கும் பயங்கர கராட்டிகள் நிறைந்தது.


## நீர்வேலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் சாரதி நடத்துநர் உட்பட பல பிரயாணிகள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 8-45 மணியளவில் நீர்வேலி - பருத்தித்துறை வீதியில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர் உட்பட பல பிரயாணிகளுடன் சென்ற மினிபஸ்ஸை நோட்டமிட்ட ஹெலிகொப்டர் அதனை நோக்கி துரத்தித் துரத்தி துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

இதனால் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்தவர்களிடையே அச்சமேற்பட்டது. பிரயாணிகள் எல்லோரும் கத்தினார்கள்.

மினி பஸ் நீர்வேலி தச்சர் மடத்தை அண்மித்ததும் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சன்னங்கள் மினிபஸ் மீது பொல பொலவென விழத்தொடங்கியது. இதனால் இரண்டு வயதுக் குழந்தை உட்பட மினி பஸ் சாரதி, நடத்துனர், உட்பட பல பிரயாணிகள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி ஆசிரியையான திருமதி இராஜசேகரம் யோகேஸ்வரி (40 வயது) ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிப் பகுதியில் ஹெகொப்டரிலிருந்து நடத்தப்பட்ட இத் தாக்குதலினால் பாடசாலையிலிருந்த மாணவர்கள் பாதுகாப்பான இடங்களைத்தேடி ஓடியதுடன் இத் தாக்குதலின் காரணமாக இபபாடசாலை உட்பட நீர்வேலியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் நேற்று இயங்கவில்லை.

## இயேசு கிறிஸ்துவுக்குள் மகிழும் தினம்



திருமதி ஹனா (அவிஸ்) ஆ. ஜா. அரியநாயகம் நினைவு ஆராதனை 28 - 3 - 87 காலை 10 மணி "கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்திரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். — சங் 16 : 5

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.

இது முதல் எனக்காக நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.
— திமோத்தேயு 4: 7, 8

மேய் ஜி. அ. அரியநாயகம், பிள்ளைகளும், சபையாரும்.
இயேசு நிலையம்,
உடுப்பிட்டி. [சி-8262]

## தீர்வுகாணவேண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பேசிய அவர் இனப்பிரச்னைக்கு ராணுவ நடவடிக்கை மூலம் ஒருபோதும் தீர்வு காணமுடியாது என்பதை இலங்கை அரசு உணரவேண்டும் என்றார். (எ)

## யாழ் மாவட்ட

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

எஸ். ராமச்சந்திரனும், சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையனும்கலந்துகொண்டனர்.

எரிபொருள், பொருளாதார தடைகளையடுத்து யாழ் மாவட்ட மக்கள் அடைந்து வரும் பெரும் கஷ்டநிலைகள் பற்றியும் இங்கு தெரிவிக்கப்பட்டது மற்றும் தொடர்ந்தும் இப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் விமானக்குண்டுவீச்சு, ஷெல் பீரங்கித் தாக்குதல்கள் பற்றியும் கொல்லப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், சேதமடைந்த உடமைகள், வீடுகள், பாடசாலைகள் ஸ்தாபனங்களின் நிலைமைகள் பற்றியும் வியவாக ஆராயப்பட்டது. (சி)

இது இவ்வாறிருக்க நேற்று நண்பகல் 12 மணியளவில் கோப்பாய் பூதர்மடத்தடியில் வான் ஒன்றின்மீதும் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதனால் இருவர் காயமடைந்தனர்.

இவ்வானில் பயணம்செய்தவர்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி தஞ்சமடைந்தனர்.

இப்பகுதியில் தொடர்ந்து இரு மணித்தியாலம்வரை நடத்தப்பட்ட 30 ஹெலிபர் தாக்குதலினால் மூன்று வீடுகள் சேதமடைந்தன. (ஓ-கு)

## நாவற்குழி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை எட்டு முப்பது மணியளவில் கைதடி கோப்பாய், அரியாலைப் பகுதிகளைச்சுற்றி மூன்று ஹெலிகள் வட்டமிட்டுக் கொண்டிருக்க நாவற்குழி இராணுவ முகாமை அண்மித்த பகுதியை அதி உயரத்தில் வட்டமிட்டுக்கொண்டு வந்த மூன்று பொம்பர்கள் நாவற்குழி சந்திக்கும் இராணுவ முகாமிற்குமிடையேயுள்ள பகுதிகளில் பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி குண்டு வீசித்தாக்குதல்களை நடத்தின

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் பொம்மரிலிருந்து வீசப்பட்ட குண்டினால் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன. முன்பும் பல தடவைகள் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் பல வீடுகள் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது

நாவற்குழிச்சந்தியில் பொம்பரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலினால் பல வீடுகள் கடைகள் என்பன சேதமடைந்துள்ளதுடன் வீதிகளில் சில குழிகளும் காணப்படுகின்றன.

சில பகுதிகளிலிருந்து ஷெல், 30 ஹெலிபர் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலினால் நாவற்குழி, கைதடி, கோப்பாய், அரியாலை, இருபாலை போன்ற பகுதிகளில் வாழும் மக்கள் அச்சமடைந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்த வண்ணமிருந்தனர்.

காலை ஒன்பது மணியிலிருந்து பத்து மணிவரை நடத்தப்பட்ட இப் பொம்மர் தாக்குதலினால் கோப்பாய் பாலமூடான போக்குவரத்துகள் ஒரு மணித்தியாலம் வரை தடைப்பட்டிருந்தன.

இத்தாக்குதலில் காயமடைந்த கணேசு யோகலிங்கம் (வயது 19) என்பவர் படுகாயத்துக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஓ-கு]

## காயமடைந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 19), கதிர்காமு செல்வராசா (வயது 36), இரத்தினம் மூர்த்தி (வயது 26), செல்வராசா ரஞ்சன் (வயது 40)

## பஸ்தரிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த மக்கள் தெல்லிப்பழை துர்க்காபுரம் பஸ்தரிப்பு மண்டபத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, தையிட்டி, மாவிட்டபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு தஞ்சமடைந்தவர்களாவர்.

தெல்லிப்பழைச் சந்தி காங்கேசன்துறை வீதியோர மர நிழல்களிலும் துர்க்காபுர பஸ்தரிப்பு மண்டபத்திலும் தஞ்சமடைந்த பல நூற்றுக்கணக்கானோர் மிகவும் களைப்பும் சோர்வும் அடைந்தநிலையில் இருக்கக் காணப்பட்டனர். (வா)

## மினிபஸ்ஸை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினால் அச்சமடைந்த மினிபஸ் சாரதி மினிபஸ்ஸைவேகமாகச் செலுத்திச் சென்றபோது ஹெலியும் பின்தொடர்ந்து மினி பஸ்ஸை துரத்தித்துரத்தி சுட்டது.

தொடர்ந்து மினிபஸ்ஸை செலுத்தமுடியாத சாரதி மர நிழலின்கீழ் பஸ்ஸை நிறுத்திவிட்டு பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடும்பொழுது ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிச்சூட்டிற்கு இலக்கானார்

இவ் பஸ்ஸில் வந்த இளம் பெண் ஒருவரும் மினிபஸ் நடத்துநரும் மரத்தின் கீழ் மறைந்து நின்ற பொழுது இம் மரத்தினைச்சுற்றிதாழப் பறந்து வந்து ஹெலி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் சோமசுந்தரம் சோதியம்மாள் என்ற அப்பெண் சிறிது காயமடைந்தார். பஸ் நடத்துநர் அதிர்ஷ்டவசமாக காயமெதுவுமின்றி உயர்தப்பினார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த மினிபஸ் சாரதியான இளையதம்பி கதிரவேலு (53 வயது) யாழ். ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (பலாலி-கு)

## ஏழுநாட்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களுடன் மதவாச்சி இராணுவ முகாமில் 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னரே செல்ல அனுமதிக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணெயை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் பாவனையாளருக்கு பங்கீட்டு அட்டைக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்துள்ள அதேவேளை கட்டுப்பாட்டு விலைக்கு அவற்றை விநியோகிக்கமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது குறைந்த அளவு எரிபொருளை எடுத்து வந்தமையால், சங்கத்திற்கு கூடுதலான செலவு ஏற்பட்டுள்ளதாகவும், எனவே கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியாதுள்ளதாகவும் சங்கத் தலைவர் யாழ் அரச அதிபருக்குத் தெரிவித்துள்ளாரெனத் தெரிகிறது.

இது இவ்வாறிருக்க, காங்கேசன்துறையில் உள்ள தெல்லிப்பழை ப. நோ. கூ. எரிபொருள் விற்பனை நிலையத்தில் வைத்து கூப்பனுக்கு வழங்கப்படவிருக்கும் பெற்றோலும், டீசலும் வந்து சேர்ந்துள்ளபோதும், வாகனச் சொந்தக்காரர் இவற்றைப் பெறுவதற்கான கூப்பன்களை இராணுவ முகாம்களில் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை இராணுவ முகாம்களிற்குச் சென்று எரிபொருள் பெறுவதற்கான கூப்பன்களை பெறுவதில்லை என வாகனச் சொந்தககாரர் தீர்மானித்துள்ளனரெனத் தெரிகிறது. (பலாலி நிரு- வா)

## வவனியா பிக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டு ஏற்று அவர்கள் யாழ். குடா நாட்டிற்கு வருவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இவ் விடயம் பற்றி திரு. கிட்டு மேலும் கூறியதாவது; சிறை பிடிக்கப்பட்ட 8 சிப்பாய்களையும், அவர்களது உறவினர்கள், தென்பகுதி சமாதானத்தை விரும்பும் பிரமுகர்கள் சகிதம் வந்து பார்வையிடுவதற்கு வவனியா பௌத்த மதகுரு விடுத்த பகிரங்க வேண்டுகோளை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அவர்கள் எந்நேரத்திலும் இங்கு வந்து யுத்த கைதகளை பார்வையிடலாம்.

பௌத்த குரு பத்திரிகை மூலம் விடுத்த பகிரங்க வேண்டுகோளிற்கு இணங்க நானும் இந்த அனுமதியை பத்திரிகை மூலம் பகிரங்கமாக வழங்குகின்றேன். அவர்கள் இங்கு வருவதற்கான திகதியை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அவர்களை இங்கு வரவேற்று, வசதிகள், பாதுகாப்பு அனைத்தையும் வழங்க நாம் தயாராகவுள்ளோம். (ச)

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிதறியது.

இச்சம்பவத்தில் படையினரின் துண்டிக்கப்பட்ட கால்களைப் புலிகள் போராளிகள் கைப்பறியுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து மூன்று ஹெலிகொப்டர்கள் வானத்தில் பறந்து மக்கள் வாழு பகுதியை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் 'ஷெல்' தாக்குதலையும் மேற்கொண்டன. பொம்மர் விமானமொன்று வானத்தில் பறந்து நோட்டமிட்டது.

இதேவேளை கடலில் கடற்படைக் கப்பலிலிருந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஹாபர் வியூ முகாமிலிருந்தும் 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் காங்கேசன்துறை மகா வித்தியாலயம், அப்பகுதியிலுள்ள பல வீடுகள் பலத்த சேதங்களுக்குள்ளாகின.

இச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் காங்கேசன்துறை முகாமிலிருந்து பல இராணுவத்தினர் வெளியே வர முற்பட்டனர். விடுதலைப் புலிகள் அவர்களையும் எதிர்த்துப் பலமணநேரம் தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ளமுடியாத இராணுவத்தினர் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைக்குள் குந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் இதனால் பல ஊழியர்கள் படுகாயமடைந்தனர்

இச் சந்தர்ப்பத்தில் சிமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமான புல்டோசர் ஒன்றைச் செலுத்திக் கொண்டிருந்த சாரதி பலத்த காயத்துக்குள்ளானார். இதனையடுத்து சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரும் அச் நந்தால் கடமைகளைவிட்டு வெளியேறிவிட்டனர். காங்கேசன்துறைச் சந்தியிலுள்ள இலங்கை வங்கிக் கட்டிடமும் பலத்த சேதத்துக்குள்ளானது.

மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள், டாக்டர்கள், மற்றும் ஊழியர்கள் பாதுகாப்புக் கருதி ஒட்டம் பிடித்தனர்.

மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, தையிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி விரைந்தன.

புலிகளின் தாக்குதலை முறியடிக்கமுடியாத படையினர் பிற்பகல் 2-30 மணியளவில் பலாலி முகாமுக்குத் திரும்பினர். (சே)

## காயமடைந்தவர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என். இ ராசையா இப்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சை குட்படுத்தப்பட்டு அவரின் மார்பில் இருந்து ஷெல்லின் பாகமொன்று எடுக்கப்பட்டு குணமடைந்துள்ளார். (வா)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



செல்லையா பாக்கியம்

தோற்றம்: 04-05-1919
மறைவு: 26-02-87

எங்கள் அன்புத் தெய்வமே, பாசச்சுடரே நீர் பெற்ற செல்வங்களின் உயர்வுக்காக உம்மையே நீர் அர்ப்பணித்தீர். உலகம் உள்ளளவும் உமது நினைவுகள் எங்கள் மனதில் என்றும் பசுமையாகவே இருக்கும். தங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்புமக்கள், மருமக்கள்.
செ. இராமச்சந்திரன் (செட்டியார்)
புங்குடுதீவு-11. (சி 8215)

## 1-ம் வருட நினைவஞ்சலி



மதியாபரணம் ஜெயராஜா
[மணஞ்கும்பான்]

ஆண்டவன் படைப்பு: 29-11-1958
ஆள்பவன் அழிப்பு: 8-4-1986
திதி: 28-3-1987

பண்பாளனைநல்லவனுப் பார் போற்று வாழ்ந்த ஜெயாவீடு வரும்முன்னே உன்னைக் கவர்ந்த யமராசா
உலகத்தில் கொடியவர் களே
கொடியவர்கள் வாழ் கின்ற பூமியிலே கொடுமைக்கு பஞ்சமில்லை என்மகனே
இந்த கொடுமையிலே சிக்கி உயிர் துறந்தனையோ! கொடுக்குதடா உன்னைப்பெற்ற வயிறு.
உன் பிரிவால் துயுறும்; தாய், சகோதரர்கள், அத்தான், மாமாமார், அண்ணிமார், மைத்துனர்கள், மருமக்கள்.
[சி-8187]

## காரைநகர் மணற்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

காரை. மணற்புலம் முத்துமாரி அம்பாள் ஆலயம் பல்லாண்டு காலம் பழமை வாய்ந்தது. சுமார் 15ஆண்டு காலத் திற்கு மேல் சுகொடியேற்றம் எதுவுமின்றி நீதிமன்றக் கண்காணிப்பிலே இருந்து வந்தது. அப்போது பூசை மட்டுமே நடைபெற்றன.

இவ்வாலயத்தின் சிறப்பம் சம் அம்பிகையை நீர்ச் சாதம் படைத்து வணங்குவதேயாகும். தீராத நோய்களில் வருந்திய மக்கள் நீர்ச்சாத நேர்த்திகடன் செய்வார்களேயானால் அந்நோய் குணமடையத் தொடங்கிவிடும். பல ஆயிரம் மக்கள் நீர்ச்சாதம்இட்டு வணங்குவர் இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக இருக்கும் முத்துமாரி அம்பிகைக்கு அருகில் கலையம்சமும் சக்தியும் மிக்க பல தெய்வங்கள் உண்டு. ஆலய முன்புறத்திலிருக்கும் உதரமகாளி மிகவும் சக்தி வாய்ந்தது.

இவ்வாலய சுற்றுடலில் அமைந்துள்ள காளி, வைரவர் சேவகர் போன்ற தெய்வங்கள் எல்லாம் அம்பிகையின் காவல் தெய்வங்களாக இருப்பதாகவே சொல்லப்படுகிறது. இப்போது இவ்வாலயங்கள் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

இவ்வாலயத்தில் ஐந்து காலப் பூசைகள் நடைபெறும். ஐந்து மணிப்பூசை விசேடமானது. இப்பூசையைக் காண்பதற்காக பலநூற்றுக் கணக்கான மக்கள் அதிகாலை மூன்று மணி தொடக்கமே ஆலயத் திற்கு வருவர்.

இவ்வாலயபிரதம குருவான திருஞான சம்பந்தக்குருக்கள் ஆலய பூசைகளை ஒழுங்காக நடத்திவருகிறார். கொடியேற்ற உற்சவம் பதினைந்துநாட்களுக்கு நடைபெறும்.

ந.சற்குணராசா.

## 1ம்-ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கமலாதேவி நடராசா

மலர்வு: 03-10-1934
உதிர்வு: 09-04-1986

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் பாசத்தின் உறைவிடமாய் இருந்து எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத் தெய்வமே, எம் அனைவரையும் மீளாத்துயரில் மூழ்க வைத்து இறைவனடி சேர்ந்து ஓராண்டுகள் கழிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் பிரிவால் வாடும்: அன்புக் கணவர், பிள்ளைகள்: வாசுகி, தேவகி, கண்ணன், ராஜமோகன், மருமகன்: Dr. கணேசராஜா.

"லிங்கவாச", ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

சி-8254

## ஆதனத்தில் 6-வது குருபூசை

யாழ்ப்பாணம், சனி.

நல்லைதிருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது ஆறுவது ஆண்டு குருபூசை ஏப்ரல் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

சமாதியில் எழுந்தருளியிருக்கும் வைத்தியநாத சுவாமிக்கு நூற்றெட்டு சங்காபிஷேகம் அன்றுபகல் நடைபெற்று பஞ்சமுகார்ச்சனை, திருமுறைஅர்ச்சனை என்பன நிகழும் நண்பகல் மகேஸ்வர பூசையும், மாலை பண்ணிசை, பஜனை, நாதஸ்வர பிருந்தகானம், தமிழ்மணி சுப கணேசசுந்தரனின் 'திருமுறைத் தென்றல்' என்னும் பஞ்சபுராண ஒலிப் பதிவு வெளியீடு முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## பூஸா முகாமிலிருந்து 50 பேர் விடுதலை

திருமலை நிருபர்

திருகோணமலை மாவட்டத் திலிருந்து கடந்த ஒருவருடத் திற்குமுன் கைது செய்யப் பட்டு பூஸா பலவத்த தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த சுமார் 50 தமிழர்கள் கடந்தவாரம் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட ஐம்பது பேரையும் மேற்படி தடுப்பு முகாம் அதிகாரிகள் திருமலை பிரஜைகள் குழுவிடம் ஒப்படைத்தனர். பிரஜைகள் குழுவினர் இவர்களை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். [சி]

## திருமலை மாவட்ட புதிய இணைப்பதிகாரி

திருமலை நிருபர்

திருகோணமலை மாவட்ட புதிய இராணுவ இணைப்பதி காரியாக பிரிகேடியர் ஜே. ஈ. பர்னுந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பெர்னுந்து பதவியேற்ற முதல்நாள் முதல் நடவடிக்கையாக கோணேஸ்வரர் ஆலயம் சென்று தரிசனம் செய்தார். (சி)

இருபாலையில்....

THE EXPRESS INSTITUTE KOPAY

A/L - 89

இரசாயனவியல்
திரு. தில்லை
மார்ச் 30ல்
காலை 6-15க்கு

பௌதிகவியல்
மார்ச் 28ல்
பி. ப. 3-00க்கு
திரு. சோதி

(எ-3816)

## பேராசிரியரின் மணி விழா

யாழ்ப்பாணம், சனி

பேராசிரியர் ப. சந்திரசேகரத்தின் மணிவிழாவும், நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கின்றது.

## ஷெல் தாக்கி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியஇருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுப்பிரமணியம் ரஞ்சன் (வயது 12)பருத்தித்துறை என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து ஒருமணித்தியாலமாக நீடித்தஇத்தாக்குதலில் ராஜகோபால்,சுப்பிரமணியம், தர்மலிங்கம் ஆகியோரது வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின. (கு)

## இன்றைய பலன்

மாதம்: பங்குனி
திகதி: 14 [1987-3-28]
கிழமை: சனி.
திதி: சதுர்த்தசி
மு. இ. வரை,
நக்ஷத்திரம்: பூரட்டாதி
மு. இ. வரை.

மேடம்: உறவாடிக் கெடுப்பதற்குப் பகைவர்கள் வருவர் உற்சாகம் குன்றும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும்:

இடபம்: எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம். நீண்ட நாள் எதிர்பார்த்த வாகனம் கிடைக்கலாம். அறிஞர்கள் ஆலோசனையும் கிடைக்கும்.

மிதுனம்: போதுமென்ற மனததுடன் புறப்படுவீர்கள். பிறருக்கு உழைப்பதில் உவகை ஏற்படும். வேதாந்தப் போக்கையும் விரும்புவீர்கள்.

கடகம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். அரசியல்வாதிகள் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

சிங்கம்: நலன் தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியுண்டு. நேர்மை வழியில் நிற்பீர்கள்.

கன்னி: செய்தொழிலில் சிரமம் தோன்றக்கூடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படும். நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடக்கூடும். கவனம் நன்று.

துலாம்: மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பிதா வழிச்சுகமும் உண்டு.

விருச்சிகம்: வணிகர்களாயின் வியாபார விருத்திக்கும் இடமுண்டு. சுதாமாக நாளை ஆரம்பிப்பீர்கள். வெளியிடத்துத் தொடர்பும் பெருகும்.

தனுசு: மதிப்பு உயரும். இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், சிக்கலான பிரச்சினையும் முடிவில் இலகுவாக அமையும்.

மகரம்: கடமையாற்றுமிடத்தில் சச்சரவுகள் தோன்றலாம். பாவதயில் பழுதுண்டு. பகைவர்கள் காத்திருப்பர். இனம் தெரியாத கவலையால் வேதனையடைவீர்.

கும்பம்: வாழ்க்கை இன்று புதிராகத்தோன்றும். ஆகாரக் குறைவிற்கும் இடமுண்டு. சகோதரி ஒருவரின் பிரச்சினை மனதுக்கு வேதனை தரும்.

மீனம்: அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பீர்கள். புலவர்கள் போற்றப்படுவார்கள். சமயோசிதமாக எதையும் சமாளித்துக்கொள்வீர்கள்.

திருமலை ரவீந்திரன்

## கிணற்றுக்குள் விழுந்து வெடிக்காத ஷெல்

யாழ்ப்பாண, சனி

அளவெட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் நேற்று அதிகாலை விழுந்த 'ஷெல்' ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அளவெட்டிப் பகுதியிலுள்ள விவசாயி இராசையா என்பவரது வீட்டுக்கிணற்றுக்குள்ளேயே இந்தஷெல் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

திருவாசகக் கருத்தரங்கு யாழ் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

திருக்கேதீஸ்வரம் திருவாசகச் சுவாமிகள் என அழைக்கப்படும் சபாரத்தினம் சுவாமிகள் முன்னிலையில் இந்த கருத்தரங்கு நாளை காலை 9 மணி ஆரம்பமாகும்.

பஜனை, திருவாசக விளக்கம் மலர் வெளியீடு ஆகியன சிறப்பு நிகழ்ச்சியாக நிகழும்.

## கிணற்றை சீரமைத்தனர்

அராலி, வெள்ளி

பலகாலமாகப் பாழடைந்த நிலையிலிருந்த அராலிவடக்கு மயானக்கிணற்றை செல்வா சனசமூகநிலைய இளைஞர்கள் துப்பரவாக்கி தற்பொழுது பாவனைக்குரியதாக ஆக்கியுள்ளார்கள்.

## பீரங்கித் தாக்குதல்

[பண்டத்தரிப்பு நிருபர்]

மாதகல் கடல் பகுதியிலிருந்து நேற்று இரவு கரையை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் இடம்பெற்றன.

கடலில் தரித்து நின்ற பீரங்கிப் படகிலிருந்தே இந்த ஷெல்கள் கரையை நோக்கி ஏவப்பட்டன. இதனால் கரையோரப் பகுதியில் வாழும் மக்கள் பெருந்த அச்சமும் பதற்றமும் அடைந்தனர். இதேவேளை ஹெலிகொப்டர்கள் இப்பகுதியில் இரவுபகலாக அடிக்கடி ரோந்து கண்காணிப்பில் ஈடுபட்டுவருகின்றன.

## 1986ல் தமிழ் மக்கள்

(4-ம் பககத் தொடர்ச்சி)

னர்; பலர் காயமடைந்தனர்.

பெப் 10ம் திகதியன்று வவனியாவிலுள்ள போடிகுளம் வவனிக்குளம் சந்தியால் வந்துகொண்டிருந்த காரொன்றைமறித்த கறுப்புடை தரித்த ஆயுதபாணிகள் காரிலிருந்த மூவரையும் சுட்டுவிட்டு சடலங்களுடன் காரை எரித்தனர். இறந்தோரில் ஒருவரான ஜேசுநாயகம் (யாழ்ப்பாணம்) தனது லொறி சிலாபத்தில் பழுதடைந்திருப்பதை கேள்விப்பட்டு 10ம் திகதிகாலை 5 மணியளவில் தமது நண்பர்களான மயில்வாகனம் (பளை) வின்சன்ட் ஆகியோருடன் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டார்.

இக்காருக்கு பின்னால் வந்த வானில் பிரயாணம் செய்தவர்கள் இச்சம்பவத்தை பார்த்துவிட்டு வவனியா அரச அதிபருக்கு அறிவித்தனர். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தனது 11ம் திகதி செய்தியில் இரு தீவிரவாக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொள்ளப்பட்டு காருடன் எரிக்கப்பட்டனர் எனக்கூறியது. இச்சம்பவத்தைப்பற்றி தேசிய பந்தோபஸ்து அமைச்சுத்தெரிவிக்கையில், காரொன்றின்மீது தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் காரிலிருந்த ஐவர் கொல்லப்பட்டதாகவும் கார் எரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தது.

தொகுப்பு:- ஸெஷ

(தொடரும்)

# மணிவிழாக் காணும் பேராசிரியர் சந்திரசேகரம்

அறிவை வளர்த்திடவேண்டும் மக்கள் அத்தனைபேருக்கும் ஒன்றுய் பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடவேண்டும்'' என்ற பாரதியின் இலட்சியத்திற்கு இலக்கணமாக வாழ்ந்துகொண்டிருப்பவர் பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்கள்.

இவர் மீன்பாடும் தேன் நாடாகிய மட்டுநகரிலே மண்டூர்ப்பதியிலே நல்லாசிரியர் வரிசையிலே மிகச்சிறந்த மறைத்திரு வியுலானந்த அடிகளின் நல்லாசியைப் பெற்ற பத்தக்குட்டி ஆசிரியருக்கு இளைய புதல்வனுக 1926-07-17 இல் பிறந்தார்.

சிறந்த இலட்சியத்தினைத் தனது இளைமைக் காலத்திலேயே கொண்டிருந்த இவர் திருகோணமலை இந்துக் கல்லூரியிலும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் யாழ் மத்திய கல்லூரியிலும் கல்வி கற்று-இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியானுர் சுவாமி விவேகானந்தரின் கல்விக்கொள்கையால்கவரப்பட்ட இவர் 1950ம் ஆண்டில் ஆசிரியரானுர்.

இந்திய அரசின் புலமைப் பரிசில் பெற்று புதுடில்லியில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி பற்றி ஆராய்ச்சி செய்த பின் இலண்டன் சென்று அங்குள்ள பல்கலைக்கழகத்தில் தம் ஆராய்ச்சியைத் தொடர்ந்து எம்.ஏ. பட்டம் பெற்றுர்.

1961ம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பகுதியின் விரிவுரையாளராகி இன்றுவரைச்கும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நல்லாசிரியப் பரம்பரையை உருவாக்கியுள்ளார்கள்.

தென் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் விரிவாக்கப்படுவதுபோல் வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கில் திருமலை

**க. இராசதுரை**
(அதிபர், யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்]

அல்லது மட்டக்களப்பிலும் தமிழ் பாரம்பரியத்திற்கு ஒப்பான பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டுமென்று குரலெழுப்பி வந்த பேராசிரியரின் கனவு 1975ல் யாழ்ப்பாணத்திலும் அதன்பின்பு மட்டக்களப்பிலும் நனவாகியது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 1980ல் கல்வியியற் புலம் [கல்வித்துறை] அமைக்கப்படுவதற்கு கால்கோளாக இருந்தவகளுள் பேராசிரியரும் முக்கியமானவர்.

'கல்வித் தத்துவம்' விவேகானந்தரின் 'கல்விச் சிந்தனைகள்' ஆகிய நூல்களின் ஆசிரியராகி பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் படைத்து இலங்கையிலும் பாரதத்திலும் வெளியிட்ட தனது மாணவர் பரம்பரையின் அறிவுப் பசியினை நீக்கிய இவர் தொடர்ந்தும் இம்முயற்சியைச் செய்யவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம் பேராசிரியரை கல்வியியற்புலத்தின் தலைவராக்கியுள்ளது. இலண்டன் ஒப்பீட்டுக் கல்வி நிறுவனம் தனது ஆய்வாளர்களில் ஒருவராக்கியுள்ளது. பாரதத்தில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகமும் கேரளப்பல்கலைக்கழகமும் கர்நாடக பல்கலைக்கழகமும் பேராசிரியரைத் தமது பட்டப்பின்கல்வி நெறிக்கான வெளிவாரிப் பரீட்சகராக்கி தமது பெருமையை உயர்த்திக்கொண்டுள்ளன.

லண்டன் கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் 1986ல் வெளியிட்டுள்ள சர்வதேசக் கல்விபற்றிய கலைக்களஞ்சியத் தொகுப்பில் உலகக் கல்விமான்களில் ஒருவராகவும் ஐக்கிய அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் சர்வதேசத் தலைமைத்துவம் பற்றிய கலைக்களஞ்சியத்தில் உலகக் கல்விமான்களில் ஒருவராகவும் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களைத் தெரிந்தெடுத்தமை எமையெல்லாம் பெருமைப்படுத்துவதாயுள்ளது.

## பேராசிரியருக்கு பாலர் கல்விக் கழகம் பாராட்டு

''கல்வி கற்ருேம் என்ற கர்வத்தில் இன்பம் கொள்ளாத எம்பேராசான் கல்லாதவரை எல்லாம் கல்வி கற்கச் செய்து அதில்இன்பம் காணும் நல்லாசான். கல்வி மூலம் சமூக சமத்துவம்ஏற்பட வேண்டுமென நாளெல்லாம் உழைப்பவர். ஏற்றதொரு கருத்து உண்டு என்ருல் எவர் எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது அஞ்சாது முன்வைக்கும் ஆளுமை உடையவர் என யாழ்ப்பாணம் பாலர் கல்விக் கழக சார்பில் திரு. எஸ். சந்திரபோஸ், மணிவிழாக் காணும் பேராசிரியர் சந்திரசேகரத்துக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## "எமது நாட்டின் உற்பத்திகளை வெளிநாடுகளில் அறிமுகப்படுத்த வேண்டும்''

மண்டைதீவு, வெள்ளி

''எமது நாட்டின் உற்பத்திகளை வெளிநாடுகளில் அறிமுகப்படுத்தி எமது கிராமியத் தொழில் வளத்தை விஸ்தரிக்கக் கூடிய வகையில் எமது வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்பட வேண்டுமே தவிர அந்நிய நாகரிகத்திற்கும். பொருளாதாரத்திற்கும் இறக்குமதிக்கும் பயன்படுவதற்குத் தொடர்புகள் ஏற்படக் கூடாது. அன்னிய நாட்டு உணவுக்கும் உடமைகளுக்கும் நாகரிகங்களுக்கும் நாம் அடிமைப் படாவிட்டால் தான் நாம் உண்மையான சுதந்திர புருஷர்களாக இந் நாட்டில் வாழ முடியும்''.

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்களில் ஒருவரான தொழிலதிபர் திரு. கே. கனகராசா இருபாலைச் சந்தியில் கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி நிலைய அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண விழாவில் திரு. கனகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''கடல்வளம் நிலவளம், வயல் வளம், பனை வளம் போன்ற வளங்களுடன் மனித வளமும் அதற்கேற்ப மனவளமும் கொண்ட சமுதாயமாக நாம் அன்றும் இன்றும் வாழ்கின்ருேம். இந்த நிலையில் அந்நியர்களின் முன் கையேந்தும் நிலை எமக்குத் தேவையற்றதாகும். நம் காலில் நாம் நிற்கும் மனப்பக்குவம் அடையும்போது எமக்குச் சுதந்திரம் தானுகவே கிடைத்துவிடும்''. இவ் வைபவத்தை லயன்ஸ் தலைவர் திரு எஸ். செல்வரத்தினம் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்கள் திருவாளர்கள் எஸ். வேலாயுதபிள்ளை, சி. பாலசிங்கம் கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். முருகேசம்பிள்ளை, கொத்தணி அதிபர் திரு. பி. இராசாத்தினம், லயன் ஆர். விஜயரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

## காரைநகர் சிவன் திருவிழா

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் சிவன்கோவில் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் வருடப் பெருவிழாவாகிய பங்குனி உத்தரமகோற்சவம் ஏப்ரல்மாதம் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது ஏப்ரல் 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 12-ம் திகதி திங்கட்கிழமை பங்குனி உத்தரத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். 13-ம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கலியாண உற்சவம் நிகழும். [ப]


# யாழ். - கொழும்பு - யாழ்.

## தினசரி மினி பஸ் சேவை [குருணுகல் ஊடாக]

மீண்டும் **ஒலிம்பிக் குறூப் ஸ்தாபனத்தாரின்** தினசரி மினிபஸ் சேவை

**29-03-87** ஞாயிறு முதல் **குதூகல ஆரம்பம்**

**பயணக் கட்டணம்: ரூபா 125/- மட்டும்**

★ துரித பயணம் ★ சௌகரியமான பயணம் ★ பாதுகாப்பிற்கு உத்தரவாதம்.

பிரயாணிகளின் நலன் கருதி

**யாழ். தெல்லிப்பளையில் இருந்து கொழும்பு வெள்ளவத்தை வரை சேவை நீடிப்பு. மேலதிக கட்டணம் இல்லை.**

புறப்படும் நேரம்: தெல்லிப்பளை: காலை 5-30 மணி. சுன்னுகம்: காலை 5-45 மணி. யாழ்.நகர்: காலை 7-30 மணி.

★ உங்கள் நண்பர்களாயினும் சரி, உங்கள் உறவினர்களாயினும் சரி, ஏன் நீங்களாயினும் சரி உங்கள் வெளிநாட்டுப் பொதிகளை உங்களுடன் பாதுகாப்பான முறையில் உங்கள் இல்லம் வரை குறைந்த கட்டணத்துடன் எடுத்துவர நீங்கள் நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்

**ஒலிம்பிக் குறூப் மினி பஸ் ஸ்தாபனம்.**

இன்றே உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்ய நாடவேண்டிய இடம்:-

யாழ். நகரில்:
1. ராஜா புக்கிங் சென்ரர், ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம்.
2. ராஜா புக்கிங் சென்ரர், ராணி தியேட்டர், யாழ்ப்பாணம்.
3. ஒலிம்பிக் ரவல்ஸ், 769 பாதை மினி பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

உங்கள் வசதிகருதி யாழ். குடாநாட்டில் ஆசனம் பதிவு செய்துகொள்ள:-

1. சண்யோ கோப்பி அன் கூல்பார், இல. 6, நவீன சந்தைக் கட்டிடம், பஸ் நிலையம் முன்பாக, சுன்னுகம்.
2. தெல்லி என்ஜினியரிங், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.
3. அருள் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி முன்பாக, மானிப்பாய்.
4. ஹோட்டல் ஜனந்த, இலங்கை வங்கி அருகாமை, கண்டி வீதி, சாவகச்சேரி.

மேலதிக விபரங்கட்கு:- தலைமைச் செயலகம், வட பிராந்திய மினிபஸ் சேவை சங்கம், கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(ஏ-3819)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 28-3-87

# இனப்பிரச்னை நீடிக்குமானால் சிங்கள சமூகமே பாதிப்படையும்

## — ஜனாதிபதி

கொழும்பு, வெள்ளி

“இனப்பிரச்னையை தீர்த்து வைக்க சகல பிரிவினரது ஒத்துழைப்பும் அவசியம். இந்தப் பிரச்னை மேலும் சில காலத்திற்கு நீடித்தால் இதனால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் சிங்கள சமூகத்தவர்களே என்பதை நாம் உணரவேண்டும்”

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் கோட்டையிலுள்ள சிறிகொத்தாவில், இலங்கை ‘ஒட்டல்’ கூட்டுத்தாபனத்தின் 20-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக இன்று நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் காணிகளைப் பகிர்ந்தளித்தும், வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தும், கல்வி வசதிகளை அளித்தும், தமிழ்மொழியை தேசியமொழி என்ற அந்தஸ்துக்கு உயர்த்தியும் இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது என்றார்.

இலங்கை இனப்பிரச்னையை மேடைப்பேச்சுக்கள் மூலம் தீர்த்துவைக்க முடியாது, இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை அரசு முன்வைத்துள்ள யோசனைகளுக்கு மதிப்பளிப்பார் என்று கூறிய ஜனாதிபதி இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அனுப்பி வைத்துள்ள தந்திச் செய்தி இனப்பிரச்னையைத் தீர்த்து விடாது என்றார்.

மேலும் அபிவிருத்திக்குச் செலவிடப்படவேண்டிய பெருந்தொகையான நிதி தற்போது பாதுகாப்புக்கு செலவிடப்படவேண்டியுள்ளது. என்றும் கூறினர். [எ]

## 10 பொது மக்கள் பலி

சென்னை, மார்ச் 27

பலாலிப் பகுதியில் பாதுகாப்புபடையினருக்கும், போராளிகளிற்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொது மக்களில் குறைந்தது 10 பேராவது கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் 18 பேர் வரை காயமடைந்திருக்கலாமென்றும் கொழும்பு செய்திகளை ஆதாரம் காட்டி சென்னை தகவல் தொடர்பு நிலையம் அறிவித்துள்ளது (க)

## அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வவனியா தமிழ் இளைஞன் எங்கே?

(வவனியா)

அநுராதபுரம் அரசினர் ஆஸ்பத்திரியில் மூளைக்காய்சல் வியாதி காரணமாக அனுமதிக்கப்பட்ட வவனியா செட்டிகுளம் வாசியான தமிழ் இளைஞனை காணவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 வயதான ஐயாத்துரை சிவகுமாரன் என்ற இளைஞன் கடந்த 17ம் திகதி அம்புலன்ஸ் மூலம் வவனியா அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து அனுராதபுர ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அடுத்தநாள் பெற்றோர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு சென்று விசாரித்தபோது குறித்த நோயாளியைக்காணவில்லை என பெற்றோரிடம் தெரிவிக்கப்பட்டதாம்.

இவ்விடயம் தொடர்பாக பெற்றோர் வவனியா பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எக்ஸ் சொர்ணபாலா மூலம் வன்னிப்பகுதி பிரதம இணைப்பதிகாரி பிரிகேடியர் டென்சில் கொப்பகடுவவின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டுவந்துள்ளார். (வா

## கிளிநொச்சி கிராமங்களில் மலையக மக்கள் இராணுவத்தால் கைது

[சங்கத்தானை நிருபர்]

கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களிலும் இராணுவம் தமது தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தி முகமூடிகளின் தலையசைப்பினால் நூற்றுக்கு மேற்பட்டோரை கைதுசெய்துள்ளது.

மலையக மக்கள் வாழும் பாரதிபுரம், கிருஷ்ணபரம், தொண்டமான் நகர், உதய நகர் முதலான கிராமங்களில் சுமார் 75 பேரை இரவோடு இரவாக இராணுவத்தினர் கைதுசெய்து முகாம் கொண்டு சென்றனர். பின்னர் இவர்களில் பலரை விடுதலைசெய்துள்ளனர்.

ஸ்கந்தபுரத்தில் முன்னாள் கிராமசேவையாளர் திரு. சாந்தலிங்கமும் இணக்கசபை உறுப்பினரும் இராணுவத்தால் கைதாகியுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க கிளிநொச்சியில் உள்ள பாடசாலை ஆசிரியர்களை இராணுவ முகாமிற்கு அழைத்து கூட்டம் ஒன்றை இராணுவம் நடத்தியுள்ளதுடன் ஆசிரியர்களின் பெயர், வயது, இருப்பிடம் முதலியவற்றையும் இராணுவத்தினர் சேகரித்துள்ளனராம். (வா)

## அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

சென்னை, மார்ச் 27

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை இவ் ஆண்டு பெப்ரவரி வரை 1 இலட்சத்தி 30 ஆயிரம் என இந்திய லோக சபாவில் நேற்று பேசிய வெளியுறவு இணையமைச்சர் நட்வர் சிங் தெரிவித்தார், 1200 பேர் வரையில் இலங்கை திரும்பியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

## இலங்கைப் பிரச்னை:

## சிதம்பரம், நட்வர்சிங் எம். ஜி. ஆருடன் பேச்சு!

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னை குறித்து இந்திய இணை அமைச்சர்களான திரு. ப. சிதம்பரம், திரு. நட்வர்சிங் ஆகியோர் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை நேற்றுக்காலை சென்னையில் சந்தித்தனர்.

சுமார் ஒருமணிநேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது. முதலமைச்சருடன் தமிழக உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனும் உடனிருந்தார்.

இச்சந்திப்பையடுத்து மத்திய அமைச்சர் திரு. நட்வர் சிங் தமிழகத்திலுள்ள பல்வேறு இலங்கைத் தமிழ்ப் போராளிகள் இயக்கத் தலைவர்களையும் நேற்று மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

## பருத்தித்துறையில் கரையொதுங்கிய மூன்று தமிழக கடற்றொழிலாளர்

(சுண்டிக்குளி நிருபர்)

சென்னையிலிருந்து கடந்த சில தினங்களுக்குமுன் மீன்பிடிப்பதற்கென இயந்திரப் படகொன்றில் புறப்பட்ட மூன்று தமிழக கடற்றொழிலாளர்கள் படகிலேற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக பருத்தித்துறையில் கரையொதுங்கியுள்ளனர்.

கரையொதுங்கிய இக்கடற்றொழிலாளர்களுக்கு பருத்தித்துறை மக்கள் உணவு, உடை என்பன வழங்கி தஞ்சமளித்து தமிழீழவிடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இச்சம்பவம் பற்றி கரையொதுங்கிய கடற்றொழிலாளியொருவர் தகவல் தருகையில் கூறியதாவது:

நாங்கள் மூவரும் பெப்ரவரி 8-ம் திகதி மீன்பிடிப்பதற்கென சென்னை கடற்கரையிலிருந்து சிறியபடகொன்றில் புறப்பட்டோம், எமது படகு நடுக்கடலையடைந்தபொழுது இயந்திரத்தில் பழுதேற்பட்டது. இதனால் கரையேற முடியாது நடுக்கடலில் ஏழு நாட்கள் தத்தளித்தோம். முதல் இரு நாட்களும் எம்முடன் கொண்டுவந்த உணவினைச் சாப்பிட்ட நாம் பின்பு ஐந்து நாட்களும் உணவெதுமின்றி பட்டினியிருந்தோம்.

ஏழு நாட்களின் பின் கடல் அலையினால் அடியுண்டு காற்றினால் இழுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை கரையை வந்தடைந்தோம்.”

தமிழகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆ. முருகன் [30 வயது] ஜீ. செல்வராசா [31 வயது) ஜீ. யோசெப் [24 வயது) ஆகியோரே இவ்வாறு கரையொதுங்கிய கடற்றொழிலாளர்களாவார்.

பருத்தித்துறை பொதுமக்களினால் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்ட இக்கடற்றொழிலாளர்கள் வல்வைப் பிரஜைகள் குழுவிடம் ஒப்படைத்தனர்.

இக்கடற்றொழிலாளர்களை தமிழகத்திற்கு திருப்பியனுப்புவது தொடர்பாக வல்வைப் பிரஜைகள்குழு நேற்று யாழ். அரச அதிபரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. (ஒ)

## 7 தமிழர் கொலை

(சென்னை)

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று இலங்கை விமானப்படையினரின் ஹெலிகாப்டர்கள் நடாத்திய பயங்கர தாக்குதலில் குறைந்தது 7 தமிழராவது கொல்லப்பட்டிருக்கலாம் பலர் காயமடைந்திருக்கலாம் என சென்னை தகவல் தொடர்பு சாதனங்கள் தெரிவிக்கின்றன.

சமீப நாட்களாக யாழ்ப்பாணப் பகுதியில் மூர்க்கத்தனமாக ஹெலிகாப்டர்கள் தாக்குதலில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (க)

## கணவனை வெட்டி கறி சமைத்தாரம்

சிங்கப்பூர் மார்ச், 27.

ஒரு பெண்ணும் அவரது மூன்று சகோதரர்களும் அந்தப் பெண்ணின் கணவனைக் கொலை செய்து அவரது உடலைத் துண்டு துண்டாக வெட்டி கறி சமைத்ததாக சிங்கப்பூர் நீதிமன்றம் ஒன்றில் இன்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள்.

ஐயாக்கண்ணு மாரிமுத்து என்பவரை 1984ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு தேவாலய வளவுக்குள் வைத்து இரும்பு கம்பியால் அடித்துக் கொலைசெய்ததாகக் குற்றப்பத்திரிகையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இந்த நால்வரில் ஒருவர் கசாப்புக் கடைக்காரரர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## கடமைக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம், சனி

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் உடன் நிலையத்திற்கு திரும்புமாறும் பொலிஸ் அத்தியட்சகர் விடுத்த கோரிக்கையை அடுத்து நேற்றுக் காலை பெரும்பாலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைக்குத் திரும்பியுள்ளதாக அறியப்படுகின்றது,

யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகஸ்த்தர் ஒருவரை கடந்த புதன்கிழமை கோட்டை இராணுவத்தினர் சுட்டுக் காயப்படுத்தியதையடுத்து சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் அன்றிலிருந்து இரு நாட்கள் கடமைக்கு செல்லாதிருந்ததது குறிப்பிடத்தக்கது. (கு எ)

## இராணுவத்தால் சுட்டு கொலை செய்யப்பட்டவரின் மனைவி பிரிகேடியரிடம் சத்தியக்கடதாசி

யாழ்ப்பாணம், சனி.

“கட்டுவனில் கடந்த மாதம் 3ம் திகதி காலை வானத்திலிருந்து ஹெலி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருக்க நடைபவனியாக வந்த இராணுவத்தினர் எனது கணவரையும், கணவரின் சகோதரரையும் சுட்டுக் கொன்றது மட்டுமல்லாமல் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வீட்டை முற்றாகச் சேதப்படுத்தியுமுள்ளனர்.

கட்டுவனில் கடந்த மாதம் 28 ம் திகதி இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட திரு. பொ. சண்முகரத்தினத்தின் மனைவி திருமதி. சரோஜினிதேவி சண்முகரத்தினம் இராணுவ பிரிகேடியரிடம் கையளித்த சத்தியக்கடுதாசியில் இவ்வாறு கூறியுள்ளார்.

திரு. பொ. சண்முகரத்தினம் (தொழில் நுட்பவியலாளர்) திரு பொ. குகரத்தினம் ஆகியோர் சம்பவதினம் இராணுவத்தனரால் சுட்டுக் கொலலப்பட்டு அவ்விடத்திலேயே எரிக்கப்பட்டார்கள்.

மூன்று பிள்ளைகளுக்குத் தாயான திருமதி. ச. சரோஜினிதேவி பிரிகேடியரிடம் சமர்பித்த சத்தியக் கடதாசியல் மேலும் கூறியிருப்பதாவது.

இராணுவத்தினரின் அனுமதியுடன் எனது வீட்டைப் பார்க்கச் சென்றபோது எனது தகப்பனார் பிரிகேடியருடன் சிங்களத்தில்கதைத்தபோதுஎன கணவரும், அவரது சகோதரரும் சுடப்பட்டு எரித்த இடத்தை இராணுவத்தினர் எங்களுக்குக் காட்டினார்கள்.

எனது வீட்டை அன்றைய தினம் நேரில் பார்த்தபோது வீடு முற்றாகச் சேதப்படுத்தப் பட்டிருந்தது. வீட்டில் இருந்த சுமார் எண்பதியிரம ரூபா பெறுமதியான 26 பவுண் தங்க நகைகள் (தாலிக்கொடி உட்பட) மற்றும் வீட்டுத்தளபாடங்கள், றேடியோ, உணவு முத்திரை, உறுதி, அடையாள அட்டை தலியவற்றையும் அங்கு காணவில்லை எனவே இவற்றுக்கான நட்ட ஈட்டைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(வா)

## துண்டாடப்பட்ட இராணுவத்தின் பாதம் மக்கள் பார்வைக்கு

பலாலி, வெள்ளி.

காங்கேசன்துறை ஊறணியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கண்ணிவெடி, றொக்கட் லோஞ்சர் தாக்குதலில் சின்னாபின்னமாகச் சிதறிய இராணுவத்தினரின் கால் ஒன்றை விடுதலைப் புலிகள் எடுத்துபொது மக்கள் பார்வைக்கு வைத்திருந்தனர்.

பூட்ஸ் அணிந்த நிலையில் இராணுவ சிப்பாய் ஒருவரின் வலது கால் பாதத்தை காங்கேசன்துறை மாவிட்டபுரம், தெல்லிப்பழைப்பகுதியில் மக்கள் பார்வைக்கு வைத்திருந்தனர் இதனைப் பெருந்தொகையான மக்கள் பார்த்துச் சென்றனர். (வா)

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389 — 24126.